ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மித்ரப் பத்திரிகை

விரோதிகிருது மார்கழி

JANUARY 1972



தொகுதி 34 பகுதி 1

Vol. 34 No. 1

ஆசிரியர்:
வைத்ய வாசஸ்பதி பண்டிட் P. S. ராம சர்மா.

பிரசுரகர்த்தா:
வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.

வருஷச் சந்தா ரூ. 5/-

Annual Subscription Rs. 5/-

1972 ஆண்டு ... 1

அகஸ்தியர் பிறந்ததின விழா ... 3

ஆரோக்கிய கல்பத்துருமம் ... 4

காரியாலயம்: 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி

வைத்யரத்னம் P. S. வாரியருடைய

# ஆர்ய வைத்தியசாலா

கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered THE ARYA VAIDYA SALA KOTTAKAL Trade Mark.

தலைமை ஆபீஸ் போன் : கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ் ஆபீஸ் - அட்மினிஸ்டிரேடர் - மானேஜர் தொடர்புடன் போன் நெ 31

நர்ஸிங்ஹோம் போன் நெ. 44

தலைமை வைத்யர் போன் நெ. 25

மானேஜிங் டிரஸ்டி (வீடு) போன் நெ 27

(ஆபீஸ்) போன் நெ 61

மானேஜர் (வீடு) போன் நெ. 26

சென்னை கிளை :

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

மற்ற கிளைகள் :

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

**மானேஜிங் டிரஸ்டி.**
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன்
## பிரைவேட் லிமிடெட்

( ஸ்தாபிதம் 1939 )

விற்பனை அண்டு ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்
31-A, சின்னகடைத் தெரு,
திருச்சிராப்பள்ளி-2.
போன் எண் : 4202.

---

## சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு முப்பது ஆண்டுகளாக பிரஸித்தமான இடம்.

பிரஸவித்த மாதர்கட்கு :

**ஸௌபாக்கிய ரஸாயனம்**

ஜீர்ண சக்தி, ரத்த விருத்தி அளிக்கும் சிறந்த லேஹியம்.

300 கிராம் பாட்டில் ரூ. 5.

**பயஸ்யா**

தாய்ப்பாலை வளர்க்கும் திவ்ய ரஸாயன லேஹியம்.

300 கிராம் பாட்டில் ரூ. 5.

— தபால் செலவு தனி —

சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்களின் மேற்பார்வையில்
தயாரிக்கப் பெற்ற
மற்ற எல்லா ஆயுர்வேத மருந்துகளும்
இங்கு கிடைக்கும்.

வைத்தியர்களுக்கும் பொதுமக்களுக்கும்
— மிகவும் நம்பிக்கையான இடம் —

T. S. ஈச்வரன், L.I.M.
மானேஜிங் டைரெக்டர்.

FOR PURE MUSK, KASHMIR SAFFRON,
GOROCHAN & INDIAN CRUDE DRUGS

WRITE TO

# M/s. KALIA BROTHERS (Regd.)

**Wholesale Musk & Indian Drugs Merchants,**

JULLUNDUR CITY (PUNJAB)

**Gram : KALIA** **Phone : Office - 3232**
**Resi. - 4343**

சுத்தமான கஸ்தூரி, காஷ்மீர் குங்குமப்பூ,
கோரோசனை மற்றும் மருந்து சரக்குகட்கு

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :

# கலியா பிரதர்ஸ் [ரிஜிஸ்டர்ட்]

கஸ்தூரி மருந்து சரக்கு மொத்த வியாபாரி,

ஜல்லந்தர் ஸிடி (பஞ்சாப்)

**தந்தி : KALIA** போன் : ஆபீஸ் - 3232
வீடு - 4343

தந்தி : "அம்ருதம்"　　P. B. No. 1382.　　போன் : 26006

# தி ஆர்ய வைத்திய பார்மஸி

## (கோயமுத்தூர்) லிமிடெட்.,

**தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18**

**உண்மையான ஆயுர்வேத**
**மருந்துகளுக்கும்**
**சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்.**

— எங்களுடைய கிளைகள் : —

| | | |
|---|---|---|
| 1. | 23 B, பூஸா ரோடு, புது டில்லி : | போன் : 585687 |
| 2. | மொயிதீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1 | ,, 2984 |
| 3. | கௌடியா மடத்தெரு, மதராஸ்-14 | ,, 85752 |
| 4. | வளிஞ்ஞம்பலம், எர்ணாகுளம், கொச்சின்-18 | ,, 32219 |
| 5. | பிள்ளையார் கோயில்ரோடு, கண்ணனூர்-1 | ,, 92 |
| 6. | மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1 | ,, 195 |
| 7. | கடைவீதி, பொன்னானி | ,, 41 |
| 8. | ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர்-1 | ,, 378 |
| 9. | கோர்ட் ரோடு, ஆலத்தூர் | ,, 87 |
| 10. | மெயின் ரோடு, கஞ்சிக்கோடு | |
| 11. | ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18 | ,, 33758 |
| 12 | இந்திரா பில்டிங், கள்ளிக்கோட்டை-2 | ,, 4891 |
| 13. | 229, ராஜவீதி, கோயமுத்தூர்-1 | ,, 33988 |
| 14. | T. T. 384 K. டெலிச்சேரி ரோடு, கண்ணனூர்-2 | |
| 15. | No. 263, 64 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னானி) | |

**பாக்டரி :**
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன் : 2)

**நர்ஸிங்ஹோம் :**
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன் : 22194)

---

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

**ஆர்ய வைத்தியன் P. V. ராமவாரியர்**
**பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.**

## வாரியர்

# க்ஷீரபலா 101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப் படுத்தும் :

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும் விருதாப்பியத்தினால் ஏற் படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML. ரூ. 7-00; 12 ML. ரூ.3–75

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

**அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,**

சைனாபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE : 5441 வீடு போன் : 6074

[1936-ல் நிறுவப்பட்டது.]



# வைத்திய சந்திரிகா


தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| தொகுதி 34 | விரோதிகிருது மார்கழி | பகுதி 1 |
| Vol. 34 | 1972 ஜனவரி | No. 1 |


॥ श्री धन्वन्तरये नमः ॥

उदेतु हृदयाकाशे गुरुर्वैद्यकलानिधिः ।
यदीयचन्द्रिका वैद्यसंशयध्वान्तनाशिनी ॥

நம: சிவகுமாராய.

## 72-வது ஆண்டு

ஒருவர் வேகமாக எங்கோ சென்றுகொண்டு இருந்தார். அவரைக்கண்டு மற்றொருவர் இன்று காலையிலேயே இவ்வளவு வேகமாகச் செல்லக் காரணம் என்ன? என்று கேட்டார். 72-ம் வருடத்தைப்பற்றி தெரிந்துகொண்டு வரலாம் என்று எண்ணிப் போகிறேன் என பதில் கூறினார். அதற்கு மற்றவர் இது ஆங்கில வருஷமாயிற்றே இதற்கு எப்படி சோதிட பலம் தெரிந்துகொள்ள முடியும்? என்று திரும்பக் கேட்டார். இல்லை இல்லை. வைத்யபலம் தெரிந்துகொள்ள விரும்பினேன். புதியதாக வைத்ய கௌன்ஸில் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதாம். அதனால் 72-ம் ஆண்டில் என்ன நன்மை ஏற்படும்? அது எவ்வாறு செயல்படும் என்பதைப்பற்றி கவலையாக இருந்தது. சோதிடத்திற்குக் கட்டுப்படவில்லையானாலும் ஆருடமாவது கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் எனக்கருதி கிளம்பினேன் என்றார்.

இவைகள் எல்லாம் மனிதனுடைய முயற்சியினுல் நடக்க வேண்டியவைகளே தவிர ஜோதிடம், ஆருடம், மாந்திரிகம் முதலானவைகளுக்கு கட்டுப்பட்டவை அல்ல, அவைகளுக்கு இங்கு இடமும் கிடையாது! திரும்பச்சென்று நல்ல முறையில் அரசாங்க ஆதரவு பெற முயற்சி செய்யுங்கள் என்று மற்றவர் கூறினுர். அவரும் ஓரளவு சமாதானம் செய்துகொண்டு 72-ம் ஆண்டில் இந்திய வைத்ய அபிவிருத்திக்காக பலவிதத்திலும் முயற்சி மேற்கொள்ளலாம் என்ற தீர்மானத்திற்கு வந்தார்.

புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள கௌன்ஸில் பத்திரிகைகளின் அபிப்பிராயங்களை அடிக்கடி தெரிந்துகொள்ள வேண்டும். சுத்த வைத்தியமா? கலப்பு வைத்தியமா? என்ற வீணுன சர்ச்சையில் இறங்கி காலத்தை வீணுக்கி விடக்கூடாது. சிறு அபிப்பிராய பேதங்களிலும் விரோதங்களை வெளிப்படுத்திக்கொண்டு இந்திய வைத்யத்திற்கு கெடுதல் வரும்படி நடந்துகொள்ளக்கூடாது. சித்த வைத்யம் முதலா? ஆயுர்வேதம் முதலா! என்ற ஆராய்ச்சியில் இறங்குவது தற்பொழுது தேவை இல்லாததொன்றுகும். எந்த வைத்யமாக இருந்தாலும் எல்லாம் சகோதர மனப்பான்மையுடன் வாழவேண்டியனவே.

தென்னுட்டில் மட்டிலுமே சித்த வைத்தியம் அதிகமாக உள்ளது என்பதனுல் அதற்கு எந்தவிதமான குறைவும் கிடையாது. குங்குமப்பூ, கஸ்தூரி முதலான உயர்ந்த பொருள்கள் சில குறிப்பிட்ட பிரதேசங்களில்தான் உண்டாகின்றன அல்லவா!

ஆகையால் சித்த வைத்தியம் வியாதியைப் போக்கும் விஷயத்தில் மிகவும் சக்திவாய்ந்தது என்பதில் சிறிதும் ஐயமில்லை. தமிழ் நாட்டில் புதிய கௌன்ஸிலில் ஆயுர் வேத வைத்தியர்களுக்கென ஒரு ஸ்தானம் தான் கொடுக்கப்பட்டுள்ளது.

அது போதாது. இந்திய வைத்யப்படிப்புள்ள ஒவ்வொரு கலாசாலைக்கும் ஒரு ஸ்தானமாவது கொடுக்கப்படவேண்டும்.

வைத்தியர்களின் தரம் குன்றுமல் பார்த்துக்கொள்வது மிகவும் முக்யம். ஆகவே பாடதிட்டங்களை எல்லா அம்சங்களிலும் நன்றுக வகுத்து மாணவர்களுக்கு போதிக்கும்படி ஏற்பாடு செய்யப்படவேண்டும். தற்போது இந்திய வைத்தியக் கல்லூரிகளில் இதர வைத்தியங்களைப்பற்றிய அறிவு அதிக அளவில் போதிக்கப்படுவதாக புகார்கள் வருகின்றன. ஆகவே புகார்கள் நீங்கும் அளவிற்கு கவனம் செலுத்தப்படவேண்டும்.

தென்னாட்டிற்கு தற்போது ஆயுர்வேதத்திற்குப் பிரதிநிதியாக இருக்கும் ஸ்ரீமான் V. நாராயணசாமி அய்யர் அவர்கள் மிகவும் தொன்மை வாய்ந்தவர். அவர் இருக்கும் போதே நமது தேவைகளை எடுத்து உரைக்க வேண்டும். தமிழ் நாட்டில் எல்லா இடத்திலும் இருக்கும் குறைபாடுகளை அவருக்குத் தெரியப்படுத்த வேண்டும். இந்திய வைத்தியர்கள் நமக்கும் ஒரு கௌன்ஸில் இருக்கிறதென்று எண்ணி தலைநிமிர்ந்து நிற்கக் கூடிய ஒரு காலம் வருமா? என்று ஆவலுடன் எதிர்பார்த்ததுண்டு. பண்டிட் சிவசர்மா அவர்களின் விடா முயற்சியால் ஷ கௌன்ஸில் ஏற்பட்டதுடன் தற்போது அவரைத் தலைவராகவும் அமைத்து இருக்கிறபடியால் 72-ம் ஆண்டில் மனித முயற்சியில் குறைபாடு ஏற்பட நியாயம் இல்லை. எல்லா வைத்திய சங்கங்களும் ஆங்காங்கே மாநாடு கூட்டி இனிமேலும் இந்திய வைத்தியம் சரியானபடி தழைத்தோங்க யோசனைகள் கூறவேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.

72-ம் ஆண்டு சிறப்புறுக!

# அகத்தியர் பிறந்த தின விழா

## சேலம்: 2—1—1972

சேலம் மாவட்ட சித்த வைத்திய சங்க சார்பிலும், தமிழ்நாடு நாட்டு வைத்தியர்கள் மத்திய சங்க சார்பிலும், சேலம் கஞ்சமலை அடிவாரத்தில் சித்தேஸ்வரன் கோயிலில் சித்தேஸ்வரருக்கு சித்த வைத்தியத்துக்கே மூல சித்தர் திரு. அகத்தியர் பிறந்த தினமாகிய மார்கழித் திங்கள் தேய்பிறை நன்னாளில் அர்ச்சனை செய்து கொண்டாடப்பட்டது. முன்பு மாநாடு போன்று வெகு விமரிசையாக கொண்டாடிய விழா கடந்த இரண்டாண்டுகளாகி கைவிடப் பட்டுள்ளது. இனி அடுத்த ஆண்டு முதல் தமிழகத்தில் உள்ள எல்லா வைத்தியர்களும் சங்கங்களும் சேர்ந்து பெரியதொரு மகா நாடும் மூலிகைக் கண்காட்சியும் நடத்த வேண்டுமென்ற பொதுச் செயலாளர் திரு. ஆர். கே. பழனியப்பா அவர்கள் கோரிய தீர்மானம் நிறைவேறியது. கஞ்சமலை சித்தர் மலை மீதேறி மூலிகை ஆராய்ச்சி நடந்தது. செயலாளர் ஆர். கே. பழனியப்பா அவர்கள் நன்றிகூற விழா மாலை 5 மணிக்கு இனிது முடிவுற்றது.

# ஆரோக்கிய கல்பத்துருமம்

## சோதத்தில் சிகித்ஸை (தொடர்ச்சி)

அமிருதாதி தைலம் : சீந்திற்கொடி, புளியிலை, முள்ளுக் கத்திரி இலை இவைகளின் சாறு அல்லது கஷாயம். இதற்குச் சமம் மூக்கரட்டை வேர், கஷாயம் இவைகளைச் சேர்த்து கோஷ்டம், கோரைக்கிழங்கு, அதிமதுரம், சதகுப்பை, விலா முச்சை வேர், வெட்டி வேர், சந்தனம் இவைகளைக் கல்கமாக்கி மோரும் கூட்டித் தயாரித்த தைலம் ஸ்நானம் செய்ய நல்லது.

வரணுதி தைலம் : மாவிலங்கை இலைச்சாறு, கடுக்காய், சதகுப்பை, கோரைக்கிழங்கு, சந்தனம், மஞ்சிட்டி, பதிமுகம், விலாமுச்சைவேர், கொம்பரக்கு, நன்னுரி இவைகள் கல்கம்; இவைகளைக் கொண்டு தைலம் தயாரித்து ஸ்நானம் செய்யலாம். கல்க ஸமான்களை காடிவிட்டரைத்துச் சேர்ப்பதுமுண்டு. மாவிலங்கைச் சாறுடன் காடியும் மோரும் சேர்த்துக் கல்கம் சேர்த்துத் தயாரிப்பதுமுண்டு.

கந்தகிருதம் : கரிக்கொட்டிக் (புளிநரளை) கிழங்கை கோமுத் திரம் விட்டரைத்துக் கலக்கி நெய் சேர்த்துக்காய்ச்சித் தயாரித்த நெய் சோதத்தில் நல்லது.

தாத்ரியாதி தைலம் : நெல்லிமுள்ளியின் கஷாயம், அறுகம் புல், வில்வ இலை, லோத்திர இலை, சீந்திற் கொடி, கருசலாங் கண்ணி இவைகளை இடித்துப் பிழிந்த ரஸம்; ஏலரிசி, லவங்கப் பட்டை, பச்சிலை, கோரைக் கிழங்கு, கோஷ்டம், அதிமதுரம், சந்தனத்தூள், விளாமுச்சை வேர், வெட்டிவேர் இவைகளின் கல்கம் – இவைகளைக் கொண்டு நல்லெண்ணெய்யோ, தேங்காய் எண்ணெய்யோ, சேர்த்துக் காய்ச்சிய தைலம் தலையில் தேய்த்து ஸ்நானம் செய்ய நல்லது.

அம்லவேதஸாதி தைலம் : புளிவஞ்சியிலை, எலுமிச்சை இலை, சுரை இலை, மூக்கரட்டை ஸமூலம் இவைகளை இடித்துப் பிழிந்த சாற்றில், சதகுப்பை, மாவிலங்கைப்பட்டை, ஒட்டுப்புல், குந்துருக்கம், ஏலரிசி, சந்தனத்தூள், கொம்பரக்கு, வெம்பாடம் பட்டை, நன்னுரிவேர், மஞ்சிட்டி, சிறுநாகப்பூ, வெள்ளைக்

குங்கிலியம். அதிமதுரம், கோஷ்டம் இவைகளைக் கல்கமாக்கி எண்ணெய் கலந்து எண்ணெய்க்கு இரண்டு பங்கு தயிர் தெளிவு சேர்த்துத் தைலம் வடித்து ஸ்நானம் செய்ய சோதம் குறையும்.

புனர்னவாதி சூர்ணம்: மூக்கரட்டைவேர், ஜடாமாஞ்சி, திப்பிலி, கடுக்காய், கோரைக்கிழங்கு, ஜீரகம், கீழாநெல்லி, கண்டந்திப்பிலி, வில்வவேர், கொடிவேலிவேர் பட்டை, தேவதாரு இவைகளை இடித்துச் சூர்ணம் செய்து வென்னீருடன் சாப்பிட உடன் வீக்கம் வடியும்.

வ்யோஷாதி மோர்: சுக்கு, திப்பிலி, மிளகு, ஏலரிசி, லவங்கப் பட்டை, லவங்கப்பத்திரி, கோரைக்கிழங்கு, திப்பிலி. கண்டந் திப்பிலி, செவ்வியம், கொடிவேலி வேர்பட்டை, சுக்கு, மஞ்சள், மரமஞ்சள், நாவல்பட்டை, சிறுநாவல்பட்டை, நிலவேம்பு, மூவிலேவேர், பிரண்டை, முள்ளுக்கத்திரிவேர், வில்வவேர், கரும்பு. புளிவேர்பட்டை, புளிவஞ்சி, மாதுளம் ஓடு, கடுக்காய், நெல்லிமுள்ளி, தானிக்காய், இலந்தைவித்து, வட்டத்திருப்பி, பெருவாகை வேர், தேவதாரு, சிறுபுள்ளடி, ஜீரகம், கருஞ்சீரகம், வசம்பு, ஓமம், கொத்துமல்லிவிதை, கருவேப்பிலே, முக்காவேளை, முன்னைவேர், வல்லாரை, மூக்கரட்டைவேர், தும்பைப்பூ, ஜடா மாஞ்சி, அம்பாடம் பட்டை, சிறுதேக்கு, நெரிஞ்சில்முள், வெட்டி வேர் இவை வகைக்கு 10 கிராம், சுத்திசெய்த நல்ல இரும்புத் தகடு 40 கிராம், சுத்திசெய்த மண்டூரம் 120 கிராம் இவைகளை இடித்துத் தூளாக்கிப் பழகிய பானையிலிட்டு 16 எலுமிச்சம்பழச் சாறு விட்டு மோர் 1200 மி. லி. கருசலாங்கண்ணிச்சாறு 600 மிலி லிட்டர், கோமூத்திரம் 150 மி. லி. இவைகள் எல்லா வற்றையும் ஒன்ருகக் கலந்து உமிக்காந்தலிலிட்டு சூடாக்கி ஆறவைத்து புகைபடும் இடத்திலிட்டு மூன்றுநாள் வைத்து, நான்காவது நாள் எடுத்து அதிலுள்ள மோரை எடுத்து வியாதிஸ்தனுக்கேற்ற அளவில் கொடுக்க வீக்கம் வடியும். பாண்டு, உதரம், காமாலே, மூலம், கிரகணீ, குல்மம், விஷமாக்னி, கூர்மம், அஷ்டீலே, தூநீ, பிரதூநீ முதலிய நோய்களில் நல்லது.

ஏகாங்க சோபத்தில்: மூக்கரட்டைவேர், சதகுப்பை, திரிபலே, இவைகளை மோரிலரைத்து வெண்ணெய் சேர்த்துப் பூசலாம். ஏகநாயகத்தின் வேரும் கடுக்காயும் மோரிலரைத்துத் தேய்க்க லாம். அடிக்கடி காடியில் நனைத்துக்கொண்டே இருக்கலாம்

சிவப்பாக உள்ள வீக்கத்தில்: வெளுத்தபூவுள்ள பரத்தைவேர் சந்தனம் இதைப் பாலில் அரைத்துப் பூசலாம். விருக்ஷிச்செடி வேர், நால்பாமரப்பட்டை இவைகளைப் பாலிலரைத்துப் பூசலாம்,

## பிடகைகளில் (கட்டிச் சிரங்குகளில்)

ஆல் அரசு அத்தி இச்சி மரங்களின் பட்டைகளைச் கஷாய மிட்டு, அதை பிடகைகளின் மேல் தாரையாக ஊற்றிப் பின்னர், சீந்தில் கொடியையும் கடுக்காயையும் அரைத்து அதன் பேரில் பூசவும்.

கடுக்காய் வெண்ணெய்: கடுக்காயை பாக்கு வெட்டியால் சரி யாக இரு துண்டாக்கி மேல் தோலுக்கு கேடு வராதவாறு விதை களை யகற்றி ஒரு துண்டின் உட்புறத்தில் எள்ளுப் பொடியையும், மற்றொரு துண்டின் உட்புறத்தில் சந்தனத் தூளையும் நிரப்பி, ஒன்று சேர்த்து, ஐந்து சீந்தில் இலைகளைக்கொண்டு அதைச் சுற்றி எல்லாவற்றையும் மூன்று அருகம் புல்களால் கெட்டியாகக் கட்டி, நிறுத்து அதற்கு 8 பங்கு பாலில் போட்டு வேக வைத்து சிறிது பால் மிகுதியாயிருக்கும்போதே இறக்கி, எல்லாவற்றையும் அரைத்து வெண்ணெய் சேர்த்து ஜலம் சுண்டும் வரை அரைத்துக் கட்டியின் வாயில் தடவ, கட்டியும் அமுங்கும் அல்லது பழுத்திருந்தால் உடைந்து அழுக்கு வெளிவரும்.

நந்தியாவட்டைக் களிம்பு: நந்தியாவட்டை மேல் தோல், நன்னாரி வேர், கொடிப்பாலை வேரின் மேல் தோல், தூணியாங்கம் இவைகளை நெய்யில் வறுத்துப் பாலில் வேக வைத்து அரைத்து வெண்ணெய் சேர்த்து நீர் சுண்ட அரைத்து கட்டிகளின் மேல் தடவ கட்டிகள் அமுங்கும் அல்லது எளிதில் உடையும்.

சாலூகாதி களிம்பு: ஆம்பல், தாமரை, நெய்தல், செங்கழுநீர், நீலோத்பலம் இவைகளின் கிழங்கு, சந்தனம், விளாமுச்சம்வேர், நன்னாரி, வெட்டிவேர், அத்திப்பட்டை, அரசம்பட்டை, இச்சிப் பட்டை இவைகளை இடித்துப் பாலில் வேகவைத்து, அரைத்து, பாலிலிருந்து எடுத்த வெண்ணெய் கூட்டி நீர் சுண்ட அரைத்து, எரிச்சல் வலி அதிகமுள்ள பழுக்காத கட்டிகளில் தடவ உடன் ஸுகமாகப் பழுத்து உடையும்.

மிருணாளாதி களிம்பு: தாமரை வளையம், கோரைக் கிழங்கு, கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, விறலி மஞ்சள், நீரோலீ இலை (மலையாளம்) வெட்பாலை மேல்பட்டை, விளாமுச்சம் வேர், கடுகு, சீந்திற்கொடி, அத்தி இலை, இச்சியிலை ஆலிலை, அருகம் புல் நுனி, ஆலம் மொக்கு, நன்னாரி, சந்தனம், குளவிக்கூடு, எள்ளு, இந்துப்பு, நருந்தாளி, தென்னம்பாளையரிசி, பர்பாடகம், சிற்றாமணக்கு விதை இவைகளைப் பாலில் வேக வைத்தரைத்து வெண்ணெய் சேர்த்து நீர் சுண்ட அரைத்துக் கொள்ளவும். விரண சோதத்தில் உள்ள தோஷ கோபத்திற் கேற்ப சிற்றாமணக்கெண்ணெய் தேன் சேர்த்தரைக்கலாம். இதைக் கட்டியின் முகத்தில் பூச மிகவும் நல்ல குணம் கிடைக்கும்,

கட்டிகள் உடைந்த பின்னர் : ஆல் அரசு அத்தி இச்சி இந் நான்கின் பட்டைகளைக்கொண்டு கஷாயம் வைத்து நன்கு அலம்பித் துடைத்து ஜாத்யாதி தைலத்தில் நனைத்த துணியை வைத்துக்கட்டவும் அல்லது அடிக்கடி தைலம் மேல் பட்டுக் கொண்டிருக்கும்படி பூசி வரவும்.

ஜாத்யர்தி தைலம் : ஜாதி இலை, கல்யாண முருங்கை இலை, கருநொச்சி இலை, புல்லாணி, ஞெட்டா ஞெடியன், நாயுருவி இலை, சிறுபூளை, அருகம்புல், பசும் மஞ்சள், பர்பாடகம், கருவேல் இலை இவைகளை இடித்துப் பிழிந்த ஜலத்தில் அதிமதுரத்தை அரைத்துக் கலக்கி நல்லெண்ணெய் சேர்த்துக் காய்ச்சவும். இது ஜாத்யாதி தைலமாகும். நல்லெண்ணெய்க்குப் பதில் தேங்காய் எண்ணெயோ நெய்யோ சேர்த்துத் தயார்செய்து கட்டி வந்துள்ள இடம், கட்டியில் பிரதான தோஷம், வயது இவைகளுக்கேற்ப உபயோகிக்கலாம்.

நல்ல அருகம்புல்லின் சாற்றில் அல்லது கஷாயத்தில் அதி மதுரத்தைக் கல்கமாக்கி சேர்த்து எண்ணெய் அல்லது நெய் சேர்த்துக் காய்ச்சித் தைலம் வடித்தும் உபயோகிக்கலாம். அல்லது ஜாத்யாதி தைலத்தில் கூறப்பட்டுள்ள திரவங்களில் அருகம்புல்லின் சாற்றை அதிகமாக்கி - மற்றவைகளுக்கு சம அளவு வரை சேர்த்தும் தைலம் காய்ச்சுவது உத்தமம்.

ந்யக்ரோதாதி தைலம் : ஆலம்பட்டை, அத்திப்பட்டை, அரசின்பட்டை, இத்திப்பட்டை, மாம்பட்டை, கல்லால்பட்டை, வெள்ளைபாச்சோத்திப்பட்டை, சிகப்புபாச்சோத்திப்பட்டை, முரள் மரப்பட்டை, நாவின் பட்டை. வன்னிமரப் பட்டை, நீர்மருதின் பட்டை, வெள்ளைக் கருங்காலி, புரசம் பட்டை, நந்தியாவட்டை, கஞ்ஞிக் கொட்டத்தின் பட்டை, இலுப்பை வைரம், அதிமதுரம், கடம்பின் பட்டை இவைகளைக் கொண்டு கஷாயம் வைத்து அதில் முன்கூறப்பட்ட ஜாத்யாதி தைலத்தின் ஜாதியிலை முதலியவைகளின் சாற்றையும் சேர்த்துக்கொள்ளவும். இந்த திரவம் நல்லெண்ணெய் அல்லது நெய் அல்லது தேங்காய் எண்ணெய் கீழ்கண்ட திரவங்களின் கல்கம் இவை கொண்டு தைலம் காய்ச்சவும், ஏலம், பேரேலம், வெட்டிவேர், சோனகப் புல், குந்துருக்கம், ஞாழல் பூ, பச்சிலை, ஜடாமாஞ்சி, கோஷ்டம், பூலாங்கிழங்கு, லவங்கப் பட்டை, நான்முகப் புல், அகில், முத்துச் சிப்பி, தேவதாரு, நாகணம், புலிச் சிமிட்டின் வேர் அல்லது புலிநகம், நிர்யாசிப்பால், தூணியாங்கம், ஜாதிக்காய், மட்டிப்பால். சண்டக் கிழங்கு, அஸாருன், குங்கிலியம், புன்னைப் பூ, கருங்காலி வைரம், சிறுநாகப் பூ, குங்குமப் பூ இவைகளைக் கல்கமாக்கிக் கொள்ளவும். எல்லா விரணங்களையும் சுத்தமாக்கி ஆற்றும்.

நிம்பாதி கஷாயம்: வேப்பம் பட்டை, சீந்திற்கொடி, சுக்கு. விரலிமஞ்சள், ஆடாதோடைவேர், கடுக்காய் தோல், தானிக்காய் தோல், நெல்லிமுள்ளி, பேய்புடல். முள்ளுக்கத்திரிவேர் இவைகளைக் கஷாயம் செய்து தேனும் குக்கிலும் மேம்பொடி சேர்த்துச் சாப்பிட கட்டிகளின் ஆரம்ப நிலையில் நல்ல சுகம் தரும். கட்டிகள் உடைந்தபின் அதே சரக்குகளுடன் ஆல் அரசு அத்தி இச்சி இவைகளின் பட்டைகளையும் சேர்த்துக் கஷாயமிடவும்.

தலையில் ஏற்படும் கட்டிகளில்: குழந்தைகளின் தலையில் கட்டிகள் ஏற்பட்டு முகம் காணாது உபத்திரவம் உண்டானால் அத்திக்காய் தும்பப் பூ எள்ளு இவைகளைப் பாலில் வேகவைத்து வெண்ணெய் விட்டு நீர் வற்றும்வரை அரைத்து அடிக்கடி தடவுவது நல்லது அல்லது தாமரைக் கிழங்கு மரமஞ்சள்தோல் எள்ளு கடுக்காய் தோல் தான்றிக்காய் தோல் நெல்லி முள்ளி இவைகளைப் பாலில் வேகவிட்டரைத்து வெண்ணெய் சேர்த்து நீர் சுண்டும் வரை அரைத்துத் தடவலாம். அல்லது முன்கூறிய சாலூகாதி களிப்பையும் தடவலாம்.

நிம்பபத்ராதி எண்ணெய்: வேப்பிலை, தண்ணீர்விட்டான் கிழங்கு கையாந்தகரை, சீந்திற்கொடி இவைகளின் சாற்றில் மஞ்சிட்டி, கோஷ்டம், அதிமதுரம், சந்தனம், விளாமுச்சை, வெட்டிவேர், கோரைக் கிழங்கு, நன்னாரி வேர், குந்துருக்கம், ஏலரிசி, லவங்கப்பட்டை, பச்சிலை இவைகளைக் கல்கமாக்கி எண்ணெய் சேர்த்துத் தைலம் காய்ச்சுக. அடிக்கடி தலையில் சிரங்குகள் ஏற்படும்போது இதைத் தடவி வரவும். இதைத் தலைக்குத் தேய்த்து ஸ்னானம் செய்துவர நல்ல குணம் தரும்.

அஷ்டபத்திர தைலம்: வெள்ளைப் பாச்சோத்தி, கல்யாண முருங்கை, கருநொச்சி, கருசலாங்கண்ணி, ஆல், அத்தி, அரசு, இச்சி இவைகளின் இலைகளை இடித்துச் சாறு எடுத்துக்கொண்டு கோஷ்டம், ஏலரிசி, அதிமதுரம், மஞ்சிட்டி, செஞ் சந்தனம் தேவதாரு, கோரைக்கிழங்கு, விளாமுச்சை வேர், அன்னாசிப்பூ, நன்னாரி, சந்தனம் இவைகளைக் கல்கமாக்கி எண்ணெய் சேர்த்துத் தைலம் காய்ச்சிக் கொள்ளவும். தலைச் சிரங்குகள் குணமாகும்.

நாற்பால் மரத் தைலம்: ஆல் அரசு அத்தி இச்சி என்ற இந்த நான்கு பால் மரங்களின் பட்டையைக் கொண்டு கஷாயம் வைத்து திரிபலையைக் கல்கமாக்கித் தைலம் காய்ச்சியும் தலைச் சிரங்குகளில் தேய்க்கலாம்.

கழுத்தில் கட்டிகள் ஏற்பட்டால்: கொழுஞ்சி வேரையோ சமுத்திராப் பழத்தையோ காடி விட்டரைத்துத் தடவ கழுத்திலுள்ள சிரங்குகள் தணியும்.

தூர்வாதி தைலம் : அருகம்புல், கல்யாண முருங்கை இலை. கருநொச்சி இலை, புண்டரீக இலை, மலையமுக்கி இலை, புல்லானி மொட்டு, வேப்பிலை, வில்வ இலை, வெற்றிலை, முடக்கத்தான், சீந்தில், பூவரச மொட்டு இவைகளை ஸம அளவில் இடித்துப் பிழிந்து சாறு எடுத்து வசம்பு, கடுக்காய், கோஷ்டம், கடுகு ரோகிணி, தகர விதை, கச்சூரிக் கிழங்கு, அரத்தை, கருஞ்சீரகம், தேவதாரு, ஸரள தேவதாரு, ஏலரிசி, லவங்கப்பட்டை, பச்சிலை இவைகளை அரைத்துக் கலக்கி எண்ணெய் சேர்த்துத் தைலம் காய்ச்சி எடுத்துக்கொள்ளவும். கழுத்தில் ஏற்படும் கட்டிகள் போகும்.

கக்ஷத்தில் ஏற்படும் கட்டிகளில் : ஆமையோடு, யானைப்பல், மான்கொம்பு இவைகளை மோர் விட்டு இழைத்து கைச் சந்து களில் ஏற்படும் கட்டிகளில் தடவ நல்லது. புங்கின் பட்டை, நீரெட்டிப்பட்டை, (நீரடிமுத்து மரப்பட்டை) இச்சிப்பட்டை, சந்தனம், செஞ்சந்தனம், எள்ளு இவைகளைப் பாலில் அரைத்து வேக வைத்து நெய் சேர்த்துத் தடவலாம்.

கைகளில் ஏற்படும் கட்டிகளில் : குழந்தைகளின் கைகளில் ஆங்காங்கு வீங்கி எலி விஷத்தால் ஏற்படும் கட்டி போன்ற கட்டி உண்டானால் அதற்கு நாற்பால் மரங்களின் (ஆல் அரசு அத்தி இத்தி, துளிர்கள் அதிமதுரம் எள்ளு அருகு சீந்திற்கொடி கடுக்காய் தோல் தானிக்காய் தோல் நெல்லிமுள்ளி இவைகளைப் பாலிலிட்டு வேக வைத்து அரைத்து நெய்விட்டு ஜலம் சுண்ட இழைத்துத் தடவ நல்லது

மார்பில் ஏற்படும் கட்டிகளில் : முகமின்றி காணப்படும் இக்கட்டிகளில் அபசிநோயில் கூறப்படும் சிகிச்சையும், நந்தியா வர்த்தாதி – மிருணாளாதி களிம்புகளில் ஒன்றைத் தடவுவதும் நல்லது. உடைந்தபின்னர் புண் ஆறுவதற்கு ஜாத்யாதி தைலம் நல்லது. மற்றும் கடுகு ரோகிணி அதிமதுரம் விளாமுச்சம் வேர் வாய்விடங்கம் சரக்கொன்னை வேர் பட்டை பரங்கிச் சக்கை இவைகளின் கஷாயமும் சாப்பிட நல்லது.

வயிற்றில் ஏற்படும் கட்டிகளில் : நன்னாரிக் கிழங்கு எள்ளு இவைகளை ஸமனெடை பாலில் வேக வைத்து அரைத்து நெய் சேர்த்துப் பூச வயிற்று மேல் ஏற்படும் கட்டிகள் குறையும்.

ஜ்வரத்துடன் கூடிய கட்டிகளில் : அடபதியன் கிழங்கு நன்னாரி வேர் அதிமதுரம் சந்தனம் ஆடாதோடை வேர் சீந்திற்கொடி பேய்புடல் கோரைக் கிழங்கு சுக்கு வெட்டிவேர் திரிபலை வேம்பின் பட்டை விளாமுச்சை வெட்பாலை யரிசி இவைகளைக் கொண்டு கஷாயம் வைத்து தேனோ பழைய வெல்லமோ அல்லது இரண்டுமோ கூட்டிச் சாப்பிட நல்லது

முற்கூறிய சிகித்ஸை முறைகள் சொல்லப்பட்ட இடங்களைத் தவிர வேறு இடங்களில் வந்தாலும் பொது முறையில் சிகித்ஸை செய்ய குணம்தரும். தலை—கக்ஷம்—வயிறு முதலிய இடங்களுக்கான தனிப்பட்ட முறைகள் விசேஷ பலனைத் தரும் என்பது தான் கருத்து.

## விருத்தியில்

அண்ட விருத்தியில் வாதசமனங்களான திரவ்யங்களை ஜலத்திலிட்டு கொதிக்க வைத்து அதனல் ஒத்தடமும், வாத சமனங்களான திரவ்யங்களை அரைத்துப் பத்துப் போடுவதும் நல்லது. கட்டியாகி பழுத்துவிட்டால் விரணத்திற்குச் செய்யும் சிகித்ஸையே நல்லது.

லசுனுதி கஷாயம் : உள்ளிப் பூண்டு, சுக்கு, மூக்கரட்டை வேர், கொட்டைக்கரந்தை, கழற்சி வேர், ஆமணக்கின் வேர் இவைகளைக் கஷாயமிட்டுப் பெருங்காயத்தைப் பொரித்து மேம் பொடியாக்கிச் சேர்த்துச் சாப்பிடலாம்.

நிர்குண்ட்யாதி கஷாயம் : கருநொச்சி வேர், ஆமணக்கு வேர் இவைகளைக் கஷாயம் வைத்து ஆமணக்கெண்ணெய் சேர்த்துச் சாப்பிட விருத்தி தணியும்.

வாஸாதி கஷாயம் : ஆடாதோடை வேர், வேலிப்பருத்தி, தேவதாரு, கருநொச்சி வேர், மாவிலங்கை வேர், சுக்கு இவைகளைக் கஷாயம் வைத்து ஆமணக்கெண்ணெய் சேர்த்துச் சாப்பிட, மேதஸ் வாயு இவை அதிகமாவதால் ஏற்படும் விருத்தி சமனமாகும்.

ஏரண்ட தைலம் : பப்பாளி இலை, வேலிப்பருத்தி இலை, கொட்டக் கரந்தை, கழற்சி இலை, உள்ளிப் பூண்டு இவைகளின் சாறு எடுத்து அதில் ஆமணக்கெண்ணெய் சேர்த்துக் காய்ச்சி வடிகட்டி சாப்பிட விருத்தி குறையும்.

வரணுதி கிருதம் : மாவலங்கை பட்டை, ஆமணக்கு வேர், தேவதாரு, கொள்ளு, உள்ளிப் பூண்டு, சுக்கு, சீந்திற்கொடி, கழற்சி வேர், வேலிப்பருத்தி இலை, திப்பிலி, கொட்டக் கரந்தை வேர் இவைகளைக் கஷாயமிட்டு வடிகட்டின கஷாயம் 4 பங்கு, நெய் ஒரு பங்கு, ஆமணக்கெண்ணெய் ஒரு பங்கு, இந்துப்பு, தேவதாரு, திப்பிலி, யானைத்திப்பிலி, கண்டந் திப்பிலி, பெருங்காயம், ஜடாமாஞ்சி, ஜீரகம், செவ்வியம், வசம்பு, மிளகு, ஓமம் இவை எல்லாம் சேர்த்து $\frac{1}{8}$ பங்கு கல்கம், இதை நெய் பாக முறைப்படி தயாரித்துச் சாப்பிட எல்லாவித விருத்திகள், குல்மம், மகோதரம் இவைகளில் சிறந்தது.

## அந்திர வாயுவில்

ஞெட்டா ஞெடியன் (மலையாளப் பெயர்) இலையைப் பிழிந்தெடுத்த திரவத்தில் ஆமணக்கெண்ணெய் சேர்த்துச் சாப்பிட குடலில் வாயு சேர்ந்து அண்டத்திலிறங்கும். அந்திர வாயு நீங்கும்.

சீயக்காய் விதை, நெல் மணி வகைக்கு ஏழெடுத்துத் தூள் செய்து ஆமணக்கெண்ணெய் சேர்த்துச் சாப்பிடலாம்.

ஓடு நீக்கிய கழற்சி வித்தை ஆமணக்கெண்ணெய் தடவி வறுத்துத் தூள் செய்து வென்னீரில் கலக்கிச் சாப்பிடலாம். கழற்சியிலையை அரைத்து மோரில் கலக்கி மோர் கடி செய்து இந்துப்பும் பெருங்காயமும் சேர்த்துச் சாப்பிட அந்திர வாயு நீங்கும்.

## குல்மத்தில்

ஆமணக்கின் வேர், கண்டந் திப்பிலி, கொடிவேலி வேர் இவைகளைக் கஷாயம் செய்து வளையலுப்பு, இந்துப்பு, பெருங்காயம் இவைகளைச் சேர்த்துச் சாப்பிட குல்மங்கள் நீங்கும்.

ஸப்தஸார கஷாயம் : மூக்கரட்டை வேர், வில்வ வேர், ஆமணக்கின் வேர், சுக்கு-கருங்குறிஞ்சி வேர் இவைகளைக் கொண்டு கஷாயம் வைத்து தோஷ கோபத்திற்கேற்ப இந்துப்பு, பெருங்காயம், நெய். திப்பிலிப் பொடி இவைகளை மேம்பொடியாகச் சேர்த்துக் கொடுக்கலாம். குல்மம், வஸ்தி, ஹிருதயம், வயிறு, முதுகு, இடுப்பு இவைகளில் ஏற்படும் வலியையும், அஷ்டீலை, மலச்சிக்கல், நீராமை, தூனி, மண்ணீரல் பருத்தல் இந்நோய்களில் இது ஒரு நல்ல கஷாயம்.

## சூலத்தில்

கள்ளியின் நடுவில் இந்துப்பை வைத்து மண்ணைப் பிசைந்து சீலை செய்து அடுப்பிலிட்டு சுட்டு, பிறகு உள்ளிருக்கும் இந்துப்பை எடுத்து வென்னீரில் கரைத்துக் கொடுக்க வயிற்று வேதனை தணியும்.

பெரிய நாயுருவியைச் சாம்பலாக்கி ஜலத்தில் கரைத்து தெளிய வைத்தெடுத்த ஜலத்தில் இந்துப்பு, ஸௌவர்சல உப்பு. யவச்சாரம் இவைகளைக் கரைத்து இளந்தீயில், ஜலம் சுண்டும் வரை எரித்தெடுத்து எடுத்த உப்பை அரைப்பணவெடை வென்னீரில் கலக்கிக் கொடுக்க சிசுவின் வயிற்று வலி நீங்கும்.

தசமூலம் போட்டுக் காய்ச்சிய பசுவின் பாலையோ, ஆட்டின் பாலையோ சர்க்கரை சேர்த்துக் கொடுக்கலாம்.

பூசணி இலை, ஏழிலம்பாலை இலை, நன்னாரி இலை இவைகளில் ஒன்றை அனலில் வாட்டிப் பிழிந்து சாற்றைச் சாப்பிடலாம்.

வெற்றிலைகளின் மேல் ஏழு தடவை எருக்கம்பாலைத் தடவி உலர்த்தி மட்பாத்திரத்திலிட்டு மூடி சீலை செய்து புகைவெளியே போகாதவண்ணம் எரித்து எடுத்த பஸ்மத்தை இந்துப்பு, ஓமம் இவைகளின் தூள் கொஞ்சம் சேர்த்து வெல்லச் சர்க்கரை சேர்த்துச் சாப்பிட நல்லது.

இருஹ தூமாதிப் பொடி : ஒட்டடைக் கரி, திப்பிலி, சுக்கு, மிளகு, இந்துப்பு, பெருங்காயம் இவைகளைப் பொடி செய்து வென்னீருடன் சாப்பிடலாம்.

அஷ்ட சூர்ணம் : திரிகடு, ஓமம், இந்துப்பு, ஜீரகம், கருஞ்சீரகம், பெருங்காயம் இவைகளைப் பொடித்து வென்னீருடன் சாப்பிட குன்மம், சூலம் நீங்கும்.

ஸைந்தவாதிப் பொடி : இந்துப்பு, திரிகடு, மூக்கரட்டை வேர் வெள்ளை வேளை வேர், கடுக்காய், வசம்பு. கொட்டைக் கரந்தை, கண்டந்திப்பிலி, செவ்வியம், ஜீரகம், கருஞ்சீரகம், மாதுளம் ஓடு இவைகளைத் தூள் செய்து சர்க்கரை சேர்த்தோ வென்னீரில் கலக்கியோ கொடுக்க நல்லது.

வைச்வானர பஸ்மம் : கொடிவேலிக் கிழங்கை உலர்த்தி இலந்தையிலைச் சாற்றில் மூன்று நாள் அடைத்து புகை வெளியே போகாதபடி மண் பாத்திரத்திலிட்டெரித்துச் சாம்பலானவுடன் எடுத்து இவ்விதமே நல்லெண்ணெய் அல்லது ஆமணக்கெண்ணெய், நெய், தேன், எலுமிச்சம் பழச் சாறு இவைகளில் ஒவ்வொன்றிலும் மூன்று மூன்று நாள் அரைத்து எரித்தெடுத்து மறுபடியும் நல்லெண்ணெய் அல்லது ஆமணக்கெண்ணெய் விட்டரைத்து எரித்து எடுத்துக் கொள்ளவும். இதை சர்க்கரை கலந்து சாப்பிட வயிற்று வலி, சூலம் இவைகளில் நல்ல குணமளிக்கும்.

இந்து காந்த இருதம் : தசமூலம், தேவதாரு, புங்கின் பட்டை இவைகளைக் கஷாயமிட்டு வடிகட்டிய திரவம் 4 பங்கு, நெய் ஒரு பங்கு, பசுவின் பால் ஒரு பங்கு, திப்பிலி, கண்டந்திப்பிலி, செவ்வியம், கொடிவேலி வேர்ப்பட்டை, சுக்கு, இந்துப்பு இவைகள் எல்லாம் வகைக்கு ஸமனெடை எடுத்து நெய்க்குக் கால் பங்கு சேர்த்து முறைப்படி நெய் காய்ச்சி வடிகட்டி சாப்பிட ராஜயக்ஷ்மா, குல்மம், சூலம், ஜ்வரம், விஷஜ்வரம் இவை நீங்கும்.

சூலாசனி வடி : துத்தம், வெங்காரம், கொழிஞ்சில் வேர், கொடிவேலி வேர் பட்டை, செவ்வியம், திரிகடு, துத்து நாக

பஸ்மம், அயஸ்காந்த பஸ்மம், நிலவேம்பு, ஜீரகம், கருஞ்சீரகம், அதிமதுரம், சுத்தலிங்கம், பச்சைக் கற்பூரம் இவைகளை எலித் தடியினிலைச் சாற்றில் ஏழு நாள் அரைத்து மாத்திரை உருட்டி நிழலிலுலர்த்தி ஜீரகக்க்ஷாயத்துடன் சாப்பிட்டு வர சூல வியாதி உடன் குணமாகும்.

## மஹோதரத்தில்

கீழே தடைபட்ட வாயு மலம் வெளிப்படுதலை அடைத்து பல உபத்ரவங்களுடன் சிசுவிற்கு உதரத்தை உண்டாக்குகின்றது. மஹோதரம் என்றது குறிப்பிடப்படுவதில்லை எனினும் அதன் சிகித்ஸை பொருந்துவதால் அப்பெயர்.

பத்யாதி கஷாயம்: கடுக்காய், மூக்கரட்டைவேர், புங்கின் துளிர், இவைகளின் கஷாயம் இந்துப்பும் வெல்லமும் சேர்த்துக் கொடுக்கலாம்.

புனர்னவாதி கஷாயம்: மூக்கரட்டை வேர், கடுக்காய், வெண் செவதை வேர் இவை மூன்றும் ஒரு பங்கு, கண்டந்திப்பிலி, திப்பிலி, செவ்வியம், கொடிவேலி வேர் பட்டை, சுக்கு இவ்வைந்தும் சேர்த்து ஒரு பங்கு இவைகளைக் கஷாயம் வைத்து சர்க்கரை சேர்த்துக் கொடுக்கலாம்.

திரிபலாதி கஷாயம்: திரிபலை, விரலி மஞ்சள், வெண் செவதை, சங்கங்குப்பி வேர், சுக்கு, ஓமம் இவைகளின் கஷாயத்தை வைத்து சர்க்கரை சேர்த்து கொடுக்கவும்.

ஆர்த்ரகாதி கிருதம்: இஞ்சி, சரக்கொன்னைத் துளிர். எருக்கிலை, கள்ளி இலை, பிரம்மி இலை இவைகளை இடிந்துப் பிழிந்த சாறும், சுக்கு, திப்பிலி, மிளகு, ஏலம், லவங்கப் பட்டை, பச்சிலை, கோரைக் கிழங்கு, நெல்லிமுள்ளி. வெண் செவதை வேர், வாய்விளங்கம் இவைகளை அரைத்துக் கல்கமும் சேர்த்துத் தயாரித்த நெய் காலையில் கொடுக்கலாம். அல்லது அன்னத்தோடு கூட சேர்த்துக் கொடுக்கலாம்.

கவாக்ஷ்யாதி குளிகை: சங்கபுஷ்பியின் வேர், கடுகு ரோஹிணி. கடுக்காய், வெள்ளெருக்கின் வேர், அவுரி, நேர்வாள விதை, நேர்வாள வேரின் மேல் தோல், தெல்லிக்காய். இலந்தை வித்து, திப்பிலி. கண்டந் திப்பிலி, சுக்கு, செவ்வியம். கொடிவேலி வேர் பட்டை இவை சமனெடை எடுத்து, கோமூத்ரம், திரிபலை கஷாயம், சீந்திற்கொடி கஷாயம். பிரமிச்சாறு, திரிகடு கஷாயம், வெண் செவதை கஷாயம், கும்மட்டிச் சாறு இவைகள் விட்

டரைத்து உளுந்தளவு மாத்திரை உருட்டி, நிழலிலுலர்த்தி, வென்னீருடன் சர்க்கரை சேர்த்துக் கொடுக்க நல்லது.

கும்பகாமாலை எனும் உதரத்துடன் காமாலையும் சேர்ந்து ஏற்படும் நோயிலும் இதே சிகித்ஸையைச் செய்யலாம்.

## பாண்டுவில்

சதாவர்யாதி கஷாயம்: தண்ணீர்விட்டான் கிழங்கு, பால் முதுக்கன் கிழங்கு, முடக்கத்தான், புத்தரிச் சுண்டை வேர், வேப்பம்பட்டை இவைகளைக் கொண்டு கஷாயம் வைத்து நெய் சேர்த்து கொடுக்க நல்லது.

குரண்டபத்ராதி கஷாயம்: மணத்தக்காளி அல்லது கருந்தாளி இலை, புங்கின் பட்டை, வல்லாரை, நாமக்கரும்பு வேர், பூசணிக்கொடி இவைகளின் கஷாயத்தை நெய் சேர்த்தும் கொடுக்கலாம்.

படோலாதி கஷாயம்: பேய்ப்புடல், மரமஞ்சள் தோல், புத்தரிச் சுண்டை வேர்- வேப்பம்பட்டை இவைகளைக் கஷாயமிட்டு நெய் சேர்த்துக் கொடுக்கலாம்.

அமிருதாதி கஷாயம்: சீந்திற்கொடி, ஆடாதோடை வேர், அதிமதுரம், புத்தரிச்சுண்டை வேர், ஏலரிசி, வேப்பம்பட்டை இவைகளைக் கொண்டு கஷாயம் வைத்துத் தேன் சேர்த்துச் சாப்பிடலாம்.

அஜமோதாதி மோர்கடி: ஓமம், மண்டூரம் வல்லாரை, எள்ளு, கருசலாங்கண்ணி இவைகளைக்கொண்டு மோரில் மோர்கடி தயாரித்துச் சாப்பிடலாம்.

பிருங்க ராஜாதி சூர்ணம்: கருசலாங்கண்ணி இலை 4 பங்கு, மிளகு 3 பங்கு, கொடிவேலி வேர் பட்டை 2 பங்கு, மண்டூரம் 1 பங்கு இவைகளை நன்கு சூர்ணம் செய்துகொண்டு, ஓமமும் சுக்கும் சேர்த்துக் காய்ச்சிய மோரில் கலக்கிச் சாப்பிட மிகவும் நல்லது.

புனர்னவாதி கஷாயம்: மூக்குரட்டை வேர், சீந்திற்கொடி, வேப்பம்பட்டை, புத்தரிச்சுண்டை வேர் மேல் தோல், கடுக்காய், மரமஞ்சள் தோல், சுக்கு, பேய்ப்புடல் இவைகளைக் கொண்டு கஷாயம் வைத்து சர்க்கரை கூட்டிக் கொடுக்க — எல்லா அங்கங்களிலும் வீக்கமும், ஜ்வரம், காஸம், சுவாஸம், வயிற்றில் வேதனை இவைகளோடு கூடின பாண்டுவில் மிகவும் நல்ல குணம் கிடைக்கும்.

இந்திராசனிப் பொடி : எள்ளு, திப்பிலி, இலந்தை விதை இவை ஒரு பங்கு, மாக்ஷிகக்கல் 2 பங்கு, இரும்புத்தூள் மூன்று பங்கு, சுக்கு 4 பங்கு இவைகளைச் சேர்த்துப் பொடித்து சம அளவு சர்க்கரை சேர்த்து தேனில் குழப்பிக் கொடுக்க பாண்டு, அர்சஸ், மஹோதரம், பவுந்தரம், மண்ணீரல் பெருத்தல், அஷ்டீலை இவை சமிக்கும்.

பத்யாதி குளிகை : கடுக்காய், மூக்கரட்டை வேர், இலந்தை இலை, எள்ளு, ஓமம், சுக்கு, கையாந்தரை, சித்தாமூட்டி வேர், கொடிவேலி வேர் பட்டை, இவை வகைக்கு சமனெடை எடுத்துச் சேர்த்து இதற்கு சமம் மண்டூரம் சேர்த்து எலுமிச்சம்பழச் சாறு விட்டு 7 நாளரைத்து, சிறு பயறளவு மாத்திரை உருட்டிக்கொள்ளவும். மோரில் கரைத்துச கொடுக்க எல்லாவித பாண்டுவிலும் நல்ல குணம் கிட்டும்,

———


# நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்

N. வைத்யநாதன், R. M. P.

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHALLA BROTHERS (Regd.)
LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS.,
MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

# இம்ப்காப்ஸ்

## பூரண இயந்திர சாதன வசதியோடு சுத்தமான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளை தயாரிக்கிறது

இந்திய மருத்துவ முறையின்படி வைத்தியம் செய்யும் மருத்துவர்கள் 1944-ம் ஆண்டிலேயே முதன்முதலாகக் கூட்டுறவுக் கொள்கையின் அடிப்படையில் ஒரு மருந்து சாலையை நிறுவினர். சுத்தமான மருந்துகளை தயாரித்து ஆயுர்வேத, சித்த, யுனானி மருத்துவ முறைக்குச் சேவை செய்வதுடன், நம் நாட்டு மருந்து மூலிகைகளை ஆராய்ந்து, புராதன மருத்துவ வல்லுநர்கள் பின்பற்றிய முறையை ஒரு நிலைப்படுத்துவதே இதன் நோக்கம். இதில் நாங்கள் நம்பிக்கையோடு முன்னேறினோம். இப்போது நவீன இயந்திர சாதன வசதிகளுடன் மருந்துகளை பக்குவமாகத் தயாரிப்பதில் பூரணத்துவம் பெற்று மக்களுக்குத் திறமையாக சேவை புரிகிறோம்.

இம்ப்காப்ஸ் தேசமக்களை ஆரோக்கியமாகவும் வலிவுள்ளவர்களாகவும் இருக்க துணை செய்கிறது.


**IMPCOPS**

தி இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ்
கோவாப்ரேடிவ் பார்மஸி
அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.
லாட்டிஸ் பிரிட்ஜ் ரோடு, அடையாறு, சென்னை-20

பிரபலமான கெமிஸ்டுகள் மற்றும் டிரக்கிஸ்டுகளிடம் கிடைக்கும்

மற்ற அலுவலகங்கள்:

4/186, மௌண்ட்ரோடு, மதராஸ்-2 போன்: 86520
48, தெற்குமாசி வீதி, மதுரை P.O.
27, காசிவிஸ்வேஸ்வரன் கோயில் தெரு, சுல்தான்பேட்டை, பெங்களூர்-2 (மைசூர் ஸ்டேட்)



maa/IMP./747/M-TA

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவத்திலும்

கண்டுபிடிக்கப்பட்ட கை கண்ட பலனளிக்கும்

# "சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக்கட்டிகளை

எந்நிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

## சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர். (S. Ry.)

Edited by Vaidya Vachaspati Pandit P. S. Rama Sarma. Published by Dr. T. S Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2. Printed at Githa Press, Tiruchirapalli-2.